## சிறைவாசிகள் உரிமைகள்

- தங்கும் இடம் குறித்த உரிமை
- தரமான உணவு பெறும் உரிமை
- உடுக்கை மற்றும் படுக்கை பெறும் உரிமை
- இலவச சட்ட உதவி பெறும் உரிமை
- இலவச கல்வி பெறும் உரிமை
- தொழிற் கல்வி பெறும் உரிமை
- பணி செய்வதற்கான உரிமை
- சுகாதாரம் மற்றும் அனைத்து விதமான மருத்துவ சிகிச்சை பெறும் உரிமை
- வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தினை பாதுகாக்கும் உரிமை
- பிணையில் செல்லும் உரிமை
- மேல்முறையீடு செய்யும் உரிமை
- மனித கண்ணியத்துடன் வாழும் உரிமை
- புத்தகங்கள் மற்றும் இதழ்கள் பெறும் உரிமை
- நியாயமான ஊதியம் பெறும் உரிமை
- தனிமைச் சிறை, கைவிலங்கு, கம்பியுடன் கால்கட்டு மற்றும் சித்ரவதைக்கு எதிர் நிலை உரிமை
- உறவினர், நண்பர் மற்றும் வழக்கறிஞரை சந்திக்கும் உரிமை
- உறவினர் மற்றும் நண்பர்களுக்கு கடிதம் எழுதும் மற்றும் கடிதம் பெறும் உரிமை
- சீர்திருத்த திட்டங்கள் பெறும் உரிமை
- குறைகள் தெரிவிக்கும் உரிமை
- பாலின துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு உரிமை
- வழக்கினை விரைவில் முடிக்கும் உரிமை
- சிறைத்துறையில் வழங்கப்படும் தொலைபேசி வசதியை பயன்படுத்தும் உரிமை

## குறைகள் தெரிவிக்கும் முறை

சிறைவாசிகள் தங்களது குறைகளை வாராந்திரப் பார்வையின்போது சிறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கலாம். மேலும், சிறைவாசிகளால் தெரிவிக்கப்படும் குறைகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்தது குறித்து விபரங்களை பதிவு செய்திட தண்டனைக் குறைப்பு பிரிவில் ஒரு பதிவேடு பேணப்பட வேண்டும் சிறைக்கு விஜயம் செய்யும் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் இதர அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் ஆகியோரிடமும் குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்கலாம். சிறையினுள் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள புகார் பெட்டிகள் மூலமாகவும் புகார்கள் தெரிவிக்கலாம். இப்பெட்டிகள் மாதம் ஒருமுறை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களால் திறக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

665

# சிறைவாசிகளின் கடமைகள்

1, சிறைவாசிகள் அணிவகுப்பின் போது நான்கு நான்கு பேராகவும் சிறைக்குள் நடமாடும்போது அடக்கமாகவும் சிறை அதிகாரி அல்லது பார்வையாளர் ஆகியோர் சிறைவாசிகள் மத்தியில் உரையாற்றும்போதோ அல்லது சிறைவாசிகள் இத்தகு அதிகாரிகளிடம் பேசும்போதும் மரியாதையுடனும் காணப்படவேண்டும்.

2. சிறைவாசிகள் உடுக்கை, படுக்கை, உணவுத் தட்டு மற்றும் குடிநீர் பாத்திரங்கள் ஆகியவைகளை சுத்தமாகவும், நன்றாகவும் வைத்திருக்கவேண்டும்.

3. சிறைவாசிகள் அவர்களுடைய அறைகள், வார்டுகளை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

4. குறிப்பிட்ட வேளைகளில் ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒழுங்காகவும், சுத்தமாகவும் குளித்து சுத்தமாக இருக்க வேண்டும்.

5. சிறைவாசிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தினசரி தவறாது சென்று பணிபுரியவேண்டும்.

6. சிறைவாசிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் கவனமாகவும் கருத்தாகவும் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி நிறைவேற்ற வேண்டும்.

7 சிறைவாசிகள் சிறையினுள் தடை செய்யப்பட்ட எந்த ஒரு பொருளைக் கண்டாலோ அல்லது இதர சிறைவாசி ஒருவர் அத்தகு பொருட்களை வைத்திருக்கக் கண்டாலோ அதை உடனடியாக சிறை அலுவலரிடமோ அல்லது அருகில் உள்ள இதர சிறை அதிகாரியிடமோ தெரிவித்தல் வேண்டும்.

8. தனக்கு தெரிந்த எந்த ஒரு சதித்திட்டத்தையோ அல்லது தப்பித்தலுக்கான ஏற்பாட்டையோ அல்லது இதர சிறைவாசி அல்லது சிறை அதிகாரியை தாக்குவதற்கான திட்டத்தையோ அல்லது எந்த ஒரு குற்றத்தையோ சிறை அலுவலர் அல்லது அருகில் உள்ள சிறை அதிகாரியிடமோ தெரிவித்தல்வேண்டும்.

9. சிறை அதிகாரிகளோ அல்லது சிறைவாசிகளோ தாக்கப்பட்டால் அவர்களுக்கு உதவிட வேண்டும்.

10. உரிய உயர் அதிகாரியால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் எல்லா விதிமுறைகளுக்கும் அறிவுரைகளுக்கும் கீழ்படிய வேண்டும்.

11. ஒவ்வொரு வேளையிலும் தேவைப்படும் அளவிற்கு மட்டுமே தலைமுடி வைத்துக்கொள்ளும் வகையில் முடி வெட்டிக்கொள்ளல் வேண்டும்.

12. சிறைவாசிகள் யோகா, தியானம், உடற்பயிற்சி, விளையாட்டு, பிரார்த்தனை மற்றும் புத்தகங்கள் மற்றும் இதழ்கள் படித்தல் ஆகியவற்றில் ஈடுபடவேண்டும்.

13. சிறைவாசிகள் தங்களது உடைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் துவைக்கவேண்டும்.

14. விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட சிறை உடைகளை அணிய வேண்டும்.

15. சிறை அடைப்பிற்கு முன்னரும், பின்னரும் மற்றும் தேவைப்படும் போதும் தன்னை பரிசோதனை செய்ய அனுமதிக்கவேண்டும்.

16. நேர்காணலுக்கு முன்பும், பின்பும் தன்னை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

17. சிறைவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறைவாசிகள் தேநீர் விடுதி அட்டையினை பத்திரமாக வைத்துக்கொள்ளவேண்டும். அதனை மற்றவர்களுக்கு மாற்றம் செய்திடவோ, மற்றவர்களுடன் பங்கிட்டுக்கொள்வதோ கூடாது. விடுதலையின்போது மேற்படி அட்டையினை தவறாது ஒப்படைக்கவேண்டும்.

18. சிறைவாசிகள் அவர்களுக்கு வழங்கப்படும் மருந்து மற்றும் மாத்திரைகளை வீணடிப்பதோ, அழித்தலோ கூடாது.

19 சக சிறைவாசிகள் உடல்நிலை சரியில்லாமல் காணப்பட்டாலோ, மன அழுத்தத்தில் இருந்தாலோ அதனை உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டும்.

20 சிறைவாசிகள் உடைகளை பயன்படுத்துவதில் சிக்கனத்தை கடைபிடிக்கவும் அரசு உடைமைகளை எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல் பாதுகாத்திட வேண்டும்.

## <u>சிறைக் குற்றங்கள்</u>

1. வரிசையில் இருக்கும்போது அல்லது சிறைச்சாலையைத் திறந்து குற்றவாளிகளை விடும்போது அல்லது கழிப்பிடத்தில் அல்லது நீராடும்போது அல்லது அணிவகுப்பு நடைபெறும்போது அல்லது பேசக்கூடாதென சிறை அலுவலர் கட்டளையிடும்போது பேசுதல், பாடுதல்,உரக்க சிரித்தல், உரக்கப் பேசுதல் ஆகியவை.

2. பிற சிறைவாசிகள் சிறை அலுவலர்கள், பார்வையாளர்கள் ஆகியோருடன் சண்டையிடுதல்.

3. சிறைச்சாலை அலுவலர் அல்லது பார்வையாளரிடம் அவமரியாதையாக நடந்து கொள்ளுதல்.

4. சிறை அலுவலர்கள் உட்பட மற்றவர்கள் மீது எழுத்துபூர்வமாக அல்லது வாய்மொழியாக ஆதாரமற்ற முறையீடுகள் செய்தல்.

5. யாதொரு சிறைக்குற்றம் செய்வதற்கு திட்டமிடுதல் மற்றும் தூண்டுதல்.

6. ஒழுங்குமுறை பராமரிப்பு செய்வதில், யாதொரு சிறைக்குற்றத்தை அறிக்கை செய்வதால் உதவி செய்ய அல்லது அப்படிச் செய்யும்படி அழைக்கப்பட்ட பொழுது ஒரு சிறைச்சாலை அலுவலருக்கு உதவி செய்யாது விட்டு விடுதல்.

7. அவர் சேர்க்கப்பட்டுள்ள தொகுதியை விட்டு அல்லது அவர் சிறை வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலைப் பகுதியை விட்டு , சிறைச்சாலை அலுவலர் ஒருவருடைய அனுமதியின்றி நீங்குதல்.

13

165

8. அவருக்கு கொடுக்கப்பட்ட பகுதி, முற்றம், வரிசையில் நிற்குமிடம், இருக்கை அல்லது துயிலிடம் ஆகியவற்றை விட்டு சிறைச்சாலை அலுவலர் அனுமதியின்றி நீங்குதல்.

9. அவை திறந்திருக்கும்பொழுது முற்றங்களில் சோம்பித் திரிதல் அல்லது பகுதிகளில் நீடித்து இருத்தல்.

10. சிறைச்சாலையில் நடமாடும்பொழுது வரிசையில் செல்லத் தவறுதல் அல்லது மறுத்தல்.

11. சாதாரண அல்லது சிறைச்சாலை உணவு அளவு வீதப்படி குறிப்பிட்ட உணவு கொள்ள மறுத்தல் அல்லது உண்ணாவிரதம் இருத்தல்.

12. சிறைச்சாலை அலுவலர் ஒருவருடைய அனும்தியின்றி சமையல் அறை அல்லது கிடங்கு அல்லது உணவு அளிக்கப்படும் இடத்திலிருந்து உணவை அகற்றுதல் அல்லது உணவுபருகத்தக்கன வழங்குதல், பகிர்வு செய்தல் பற்றிய யாதொரு உத்தரவை மீறுதல்.

13. கொடுக்கப்பட்ட உடையை அணியாதிருத்தல் அல்லது அணிய மறுத்தல், அல்லது அதன் யாதொரு பாகத்தை சொடுத்துவிட்டு பகுதியை வாங்கிக் கொள்ளுதல், இழத்தல், தள்ளுதல், சேதப்படுத்துதல் அல்லது யாதொரு பகுதியை மாற்றுதல்.

14. உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளாமை அல்லது தலைமுடி அல்லது நகங்களை வெட்டுதலை ஒழுங்குபடுத்துவதற்கான யாதொரு உத்தரவை மீறுதல்.

15. உடை, கம்பளங்கள்,படுக்கை தளைகள், அலுமினியக் கோப்பைகள், அல்லது தட்டுகள், உலோகப் பொருள் டிக்கெட்டுகள் அல்லது இதர அடையாளக் குறிகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ளாமை அல்லது மறுத்தல் அத்தகைய பொருள்களை ஒழுங்குபடுத்தல் அல்லது அதன் நிலைமையைப் பற்றிய யாதொரு உத்தரவை மீறுதல்.

16. சிறைத்திரை, கதவு, சுவர் அல்லது சிறைக்கட்டிடத்தின் மற்றப் பகுதி அல்லது சிறைச்சாலையின் யாதொரு பொருளின் மீது துப்புதல் அல்லது வேறு வகையில் அவற்றின் தூய்மை கெடுமாறு செய்தல். சிறைச்சாலை பூட்டுகள், விளக்குகள் அல்லது அவருக்கு சம்மந்தமில்லாத மற்ற சொத்துகள் ஆகியவற்றை யாதொரு வழியில் நேர்மையாகவன்றி மாறுதல் செய்தல்.

17. அரசுடைமை மற்றும் சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களை களவாடுதல், சேதப்படுத்துதல், அழித்தல், உருமாற்றுதல்.

18. அனைத்துவிதமான இடையூறு மற்றும் தொந்தரவு ஏற்படுத்துதல்

19. சிறைச்சாலைப் பொருள்கள் அல்லது கருவிகளுக்கு அவர் தற்செயலாக ஏற்படுத்திய இழப்பு, உடைத்தல், அல்லது விளைவித்த கெடுதியைப் பற்றி உடனடியாக அறிக்கை செய்யத் தவறுதல்.

20. சிறைச்சாலை அலுவலர் ஒருவரது அனுமதியின்றி அல்லது அவருக்கு எவ்வித தகவலும் கொடுக்காமல் யாதொரு பொருளை உற்பத்தி செய்தல்.

21. தமக்கு யாதொரு நோய், இடர் அல்லது ஏலாமை வேண்டுமென்றே ஏற்படுத்திக்கொள்ளும் கருத்துடன் யாதொரு செய்கையைச் செய்தல் அல்லது செய்யாமல் விட்டு விடுதல்.

22. வன்செயல் அல்லது எந்தவிதமான கீழ்ப்படியாமை ஏற்படுத்துதல் அல்லது அதை அடக்குவதில் உதவி செய்யாமை.

23. சிறைவாசிகள் அல்லது சிறை அலுவலர்கள் மீது தாக்குதலில் பங்கேற்றல்.

24. தப்பி வெளியேற முயற்சி செய்யும் ஒருவரைப் பொறுத்தவரையில் சிறைச்சாலை அலுவலர் ஒருவருக்கு அல்லது அத்தகைய அலுவலர் அல்லது சிறைப்பட்ட மற்றவர் மீது தாக்குதல் ஏற்படுமாயின் அதில் அவருக்கு உதவி செய்யாமை அல்லது உதவி செய்ய மறுத்தல்.

25. சிறைச்சாலை அலுவலர் ஒருவர் பிறப்பிக்கும் சட்டப்படியான யாதொரு உத்தரவுக்கு கீழ்ப்படியாதிருத்தல் அல்லது குறிப்பிட்ட வகையில் கடமைகளைச் செய்யாமை அல்லது மறுத்தல்.

26. தனிப்பட்ட முறையில் தாக்குதல் , காயம் விளைவித்தல் .

27. கலவரம் மற்றும் கலகம் ஆகியவற்றைத் தூண்டுதல் மற்றும் பங்கெடுத்தல்.

28. தப்பித்தல் மற்றும் தப்பிக்க முயற்சி செய்தல் மற்றும் அது சம்மந்தமாக அறிக்கை செய்யத் தவறுதல்.

29. தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருத்தல், மறைத்து வைத்தல் , கடத்துதல், கடத்த முற்படுத்துதல் மற்றவர்களுக்கு கொடுக்கல்,வாங்கல் மற்றும் இது சம்மந்தமாக அறிக்கை செய்யத் தவறுதல்.

30. அடையாள அட்டை ,ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களை திருத்துதல் அல்லது உருமாற்றுதல் .

31. விதிகளுக்கு மாறாக உணவு தயாரித்தல்

32. பிறரது மத உணர்வுகள், நம்பிக்கைகளை வேண்டுமென்றே புண்படுத்துதல்.

33. சூதாட்டம் போன்ற அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகள் பங்கெடுத்தல் மற்றும் நடத்துதல்.

34. கண்ணியமற்ற, விரும்பத்தகாத , அச்சுறுத்தக்கூடிய , தகாத முறையில் பேசுதல், அவமரியாதை செய்தல் மற்றும் கண்ணியமற்ற மற்றும் கொச்சையான முறையில் நடந்துகொள்ளுதல் மற்றும் சைகையளித்தல்.

35. அவசர கால விடுப்பு மற்றும் இதர விடுப்பு நிபந்தனைகளை மீறுதல் .

15

653

## தடை செய்யப்பட்ட பொருள்கள்

1894 ஆம் ஆண்டு சிறைச்சாலை சட்டம் 42 ஆவது பிரிவு மற்றும் 45 ஆவது பிரிவு (12) ஆவது உட்பிரிவு ஆகியவற்றின் கருத்தின் கீழ் வருபவை தடை செய்யப்பட்ட பொருள்களாக கருதப்படவேண்டும்.

1. நஞ்சுகள்
2. எவ்வடிவிலாயினும் போதை நீர், புகையிலை அல்லது புகைபிடிப்பதற்கான கருவிகள்,செல்போன், சிம்கார்டு, சார்ஜர்.
3. பொடி அபின், கஞ்சா அல்லது இதர சணல் மருந்து சரக்குகள்
4. வெற்றிலை மற்றும் பாக்கு,
5. அங்கீகரிக்கப்படாத உணவு, பழங்கள், இனிப்புகள் ,மற்றும் கார வகைகள்
6. அங்கீகரிக்கப்படாத உடைகள்.
7. சிறையினுள் சமைப்பதற்காக வெளியிலிருந்து பெறப்படும் உணவுப் பொருட்கள்
8. தங்கம், வெள்ளி ,செம்பு மற்றும் இதர உலோகம்
9. பணம்
10. நகைகள்
11. துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள்
12. ஆயுதங்கள், கத்தி மற்றும் வெட்டக்கூடிய அனைத்து விதமான கருவிகள்
13. உலோகப் பொருட்கள் அல்லது தோல் வேலை செய்வதற்கான கருவிகள்
14. தீப்பற்றக்கூடிய தீக்குச்சிகள் மற்றும் பொருட்கள்
15. அங்கீகரிக்கப்படாத எழுதுபொருட்கள்
16. அஞ்சலக வில்லை மற்றும் அங்கீகரிக்கப்படாத கடிதங்கள்
17. சிறையினுள் அங்கீகரிக்கப்படாத புத்தகங்கள்
18. சீட்டுக்கட்டு மற்றும் சூதாட்ட பொருட்கள்
19. தப்பித்தலுக்கு துணை போகிற மற்றும் காயம் விளைவிக்கக்கூடிய பொருட்கள் ; மூங்கில், ஏணி,கம்புகள், கயிறுகள், கம்பிகள் .
    செல்போன், சிம்கார்டு, பேட்டரி , சார்ஜர் மற்றும் இதர தகவல் தொடர்புக்கு உபயோகப்படுத்தக்கூடிய இணை பொருட்கள்.
20. சிறை விதிகளின்படி அனுமதிக்கப்படாத இதர பொருட்கள் மற்றும் அங்கீகாரம் வழங்கப்படாத பொருட்களைப் பெறுதல், வைத்திருத்தல் மற்றும் மாற்றுதல்.

## தண்டனைகள்

**சிறிய தண்டனைகள்:-**

1) வழக்கத்திற்கிசைந்த எச்சரிக்கை
2) அதிகத் தொல்லை தரும் அல்லது கடுமையான வகைத்தொழில் குறிப்பிட்ட கால அளவுக்கு புரியுமாறு அத்தகைய வேலை கொடுத்தல்.
3) ஈட்டப்பட்ட தண்டனைக் குறைப்பில், நான்கு நாட்களுக்கு மிகாமல் தண்டனைக் குறைப்பு இழக்கப்படுமாறு பறிமுதல் செய்தல்.
4) மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு வகுப்பு, தரம் அல்லது சிறை சலுகைகள் இழக்கப்படுமாறு பறிமுதல் செய்தல்.
5) மேல்வகுப்பு வகுப்பு அல்லது தரத்திலிருந்து கீழ் வகுப்பு அல்லது தரத்துக்கு தற்காலிகமாக குறைத்தல்.
6) 14 நாட்களுக்கு மேற்படாமல் சிறைச்சாலையில் தனியாக பிரித்து வைத்து கண்காணித்தல்

**பெரிய தண்டனைகள்:-**

1) கடுங்காவல் தண்டனை விதிக்கப்படாத சிறைப்பட்டவர்களைப் பொறுத்த வரையில், கடினமான தொழில்
2) ஈட்டிய தண்டனைக் குறைப்பில் நான்கு நாட்களுக்கு மேற்பட்டும், 20 நாட்களுக்கு மேற்படாமலும் தண்டனைக் குறைப்பு இழக்கப்படுமாறு பறிமுதல் செய்தல்
3) ஈட்டிய தண்டனைக் குறைப்பில் , 20 நாட்களுக்கு மேற்பட்ட தண்டனைக் குறைப்பு இழக்கப்படுமாறு பறிமுதல் செய்தல்.
4) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட கால அளவுக்கு வகுப்பு, தரம் அல்லது சிறை சலுகைகள் இழக்கப்படுமாறு பறிமுதல் செய்தல்
5) ஐந்து மாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்குத் தண்டனை குறைப்புத் திட்டத்திலிருந்து விலக்கி வைத்தல்.
6) ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவிற்குத் தண்டனை குறைப்புத் திட்டத்திலிருந்து விலக்கி வைத்தல்.
7) மேல் வகுப்பு அல்லது தரத்திலிருந்து கீழ் வகப்பு அல்லது தரத்துக்கு நிலையாகக் குறைத்தல்.
8) 14 நாட்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவிற்குச் சிறைச்சாலையில் தனியாக பிரித்து வைத்து கண்காணித்தல்.
9) சட்டத்தின் 47 ஆவது பிரிவின் கீழ் அனுமதிக்கப்படத்தக்க சிறு தண்டனைகள் ஒன்று சேர்க்கப்படுதல்.

குறிப்பு : சிறைவாசிகள் மீதான புகார் தொடர்பாக அச்சிறைவாசிகள் சிறைக் கண்காணிப்பாளர் முன் ஆஜர்படுத்தப்படும் போது, சிறைக் கண்காணிப்பாளரால் சிறைவாசிகள் மீதான புகார் தொடர்பாக நியாயமான முறையில் முறையான விசாரணை நடத்தப்படும்.

## PRISONERS RIGHTS

- Right to get accommodation
- Right to get quality for food
- Right to get clothing and bedding
- Right to get free legal aid
- Right to get free education
- Right to get vocational training
- Right to work
- Right to get Health and Medical treatment of all kinds
- Right for protection of life and personal liberty
- Right to bail
- Right to appeal
- Right to live with human dignity
- Right to receive books and magazines
- Right to reasonable wages
- Right against solitary confinement, Hand cuffing of Bar fetters and protection from torture
- Right to meet the relatives ,friends and Advocates
- Right to write letters to family and friends and to receive letter
- Right to reformative programmes
- Right to make grievances
- Right to protection against being forced into sexual activities
- Right to speedy trial
- Right to avail telephone facility provided by prison authority.

## MECHANISM FOR RAISING GRIEVANCES /COMPLAINTS BY PRISONERS

The prisoners can express their grievances to the Superintendent of Prisons during the weekly inspection. For that purpose separate register shall be maintained in the Remission section. In addition to this they can express their grievance and submit complaint to the visiting District and Sessions Judge and other official visitors. They can also post their complaint through the complaint boxes kept in important places, which will be opened by the District and Sessions Judge, once in a month and action will be taken.

## DUTIES OF PRISONERS

i. Prisoners shall sit in fours per row while taking census and give proper respect to the prison personnel all times.

ii. Prisoners shall keep their clothing, bedding and eating vessels cleanly.

iii. Prisoners shall keep their cells and wards neatly

iv. Prisoners shall take bath at appropriate time and keep their body clean.

v. Prisoners shall go to the work places allotted to them and work there without fail.

vi. Prisoners shall perform their given responsibilities and work as per the instructions.

vii. Prisoners shall keep inform the higher officers about the possession and using of any kind of prohibited articles by any prisoner in their ward or any place.

viii. Prisoners shall keep inform about any conspiracy planned by other prisoners for escape or assault of prison officers, Prisoners or any other such kind of activities to the prison higher officers.

ix. Prisoners shall assist to prevent any kind of assault to prisoners and officers inside the prison.

x. Prisoners shall obey all the orders and instructions of the prison officers at all times.

xi. Prisoners shall have the hair of their head cut or trimmed

xii. Prisoners shall perform yoga, Meditation, Physical exercise, games, Prayer and reading of books and magazines.

xiii. Prisoners shall wash their clothes on Sundays.

xiv. Prisoners shall wear only the uniform cloth issued for them

xv. Prisoners are subjected to frisking before/after lock up and whenever necessary.

xvi. Prisoners are subjected to searching before and after interview

xvii. Prisoners shall not waste the food issued to them.

xviii. Prisoners shall keep the prisoners canteen card safely and it should not be transferred or shared to other prisoners. They shall return the card at the time of release without fail.

xix. Prisoners shall not waste or destroy the medicines issued to them

xx. Prisoners shall keep economy in wearing clothes and shall not make any damaged to the Government properties.

## PRISON OFFENCES

(1) Talking when at file or at unlocking or at latrine, bathing or other parades or during working hours or at any time when ordered by a prison official to desist, and singing, loud laughing and loud talking at any time;

(2) Quarrelling with other prisoners, prison officials, visitors and others;

(3) Showing disrespect to any prison officer or visitor;

(4) Making false, malicious, groundless, written or oral complaints against others including prison officials;

(5) Planning, instigating, abetting directly or indirectly, in commission of any prison offence;

(6) Failing to assist in the maintenance of discipline or to give assistance to a prison official when called upon to do so;

(7) Leaving, without permission of the prison official the gang to which he is attached or part of the prison in which he is confined;

(8) Leaving, without permission of a prison official; the ward, the yard, the place in file, the seat or berth assigned to him;

(9) Loitering about the yards or lingering in the wards when these are open;

(10) Omitting or refusing to march in file when moving about the prison;

(11) Refusing to eat food or the food prescribed by the prison diet-scale or going on hunger strike;

(12) Removing without permission of a prison official, food from the cook-room or godowns or from the place where meals are served, or dis-obeying any order as to the issue and distribution of food and drink;

(13) Omitting or refusing to wear the clothing given to him, or exchanging any portion of it for the clothing of other prisoners or losing, discarding damaging or altering any part of it;

(14) Omitting or refusing to keep the person clean or disobeying any order regulating the cutting of hair or nails;

(15) Omitting or refusing to keep clean his clothing, blankets, bedding, aluminum cups or platters or metal tickets or other identification token or disobeying any order as to the arrangement or disposition of such articles;

(16) Endangering the security and custody of a prison in any way through awful or negligent act, tampering in any way with prison walls, building, bars, locks and keys lamps and lights or with any other security and custody measures;

(17) Stealing, damaging, destroying, disfiguring, mis-appropriating any Government property or prisoners articles and property;

(18) Committing a nuisance of mischief of any sort;

(19) Omitting to report at once any loss, breakage or injury which he any accidentally have caused to prison property or implements;

(20) Manufacturing any article without he knowledge or permission of a prison officials;

(21) Doing or omitting to do any act with intent to cause to himself any illness, injury, or disability;

(22) Causing or failing to assist or preventing other person from assisting prison officials in suppressing violence assault, riot, mutiny, attack, personal violence or any other emergencies including insubordination of any kind;

(23) Taking part in any attack upon any prisoner or prison official or others;

(24) Omitting or refusing to help any officer of the prison in case of an attempted escape or of an attack upon such officer or upon another prisoner;

(25) Refusing or omitting or conniving or disobeying to abide by standards of behavior, rules, regulations, lawful instructions and orders or omitting or refusing to perform duties in the manner prescribed;

(26) Attacking or assaulting or causing gross personal violence;

(27) Abetting or participating in riot or mutiny;

(28) Escaping or attempting to escape from prison or legal custody or failure to report to prison officials about attempt to escape;

(29) Possessing, hiding, smuggling or attempting to smuggle, obtaining, giving or receiving or bartering contraband articles, failing to report to prison officials about contraband articles;

(30) Tampering or defacing identity cards, records or documents;

(31) Cooking unauthorisedly;

(32) Willfully hurting religious feelings, beliefs and faith of others;

(33) Participating or organizing unauthorized activities like gambling and the like;

(34) Using indecent, abusive, insolent, threatening or improper language; being disrespectful, remaining indecent or vulgar acts or gestures;

(35) Breaches of the conditions of emergency and other leave.

# PROHIBITED ARTICLES

The following shall be deemed to be prohibited articles within the meaning of section 42 and clause (12) of section 45 of the prisons Act, 1894 (Central Act IX of 1894) namely;-

(a) Poisons;

(b) Alcohol and sprits in any form and of every description and also tobacco in any form, cell phone, Sim Card, in any form.

(c) Bhang, ganja, opium and other hemp drugs and intoxicants;

(d) Betal nuts and leaves;

(e) Unauthorized food, fruits, sweets, condiments and the like;

(f) Unauthorized clothing;

(g) Raw rations received by the prisoners from outside the prison for cooking their food in the prison.

(h) Gold, silver, copper or any metal in any form;

(i) Money;

(j) Jewellery;

(k) Fire arms and explosive materials;

(l) Weapons, knives and cutting implements of all kinds;

(m) Tools for working wood, metal or leather

(n) Matches and material for producing fire;

(o) Unauthorized writing materials;

(p) Postage stamps and unauthorized letters;

(q) Books other than those approved by prison authorities;

(r) Playing cards or other gambling materials;;

(s) Bamboos, ladders, clubs, sticks, ropes, string and any materials which can be used to assist in the escape of a prisoner or as implements for causing hurt;

(a) Cell phone, Sim Card, Mobile Battery Charger or any Other Accessories which are used for communication purpose.

(t) Any other article whatsoever not specially permitted by the prison rules and articles received, possessed or transferred otherwise than by due authority.

## PRISON PUNISHMENTS

The punishments enumerated in section 46 of the prisons Act, 1894 (Central act IX of 1894), shall be classified into minor and major punishment.

(a) Minor - The following punishment shall be considered as minor punishments, namely;

(1) Formal warning;

(2)Change of labour for a stated period to a some more irksome or severe form;

(3) Forfeiture of remission earned, not exceeding four days;

(4) Forfeiture of class, grade, or prison privileges for a period of not exceeding three months;

(5) Temporary reduction from a higher to a lower class or grade;

(6) Separate confinement for not more than fourteen days;

(b) Major- The following punishments shall be considered major punishments, namely;-

(1) Hard labour in the case of prisoners not sentenced to rigorous imprisonment namely.

(2) Forfeiture of remission earned, exceeding four but not exceeding twenty days;

(3) Forfeiture of remission earned, in excess of twenty days;

(4) Forfeiture of class, grade or prison privileges for a period exceeding three months;

(5) Exclusion from the remission system for a period not exceeding five months;

(6) Exclusion from the remission system for a period exceeding five months;

(7) Permanent reduction from a higher to a lower class or grade;

(8) Separate confinement for a period exceeding fourteen days; and

(9) Any combination of minor punishments admissible under section 47 f the prisons Act, 1894 (Central Act IX of 1894)

**Note:** Whenever prisoner are produced before Superintendent for punishment , the Superintendent shall conduct a through enquiry in a fair manner.